தினமணி

**விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம்**

First Published : 29 Jan 2011 12:07:46 PM IST

திருப்பரங்குன்றம், ஜன. 28: மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் வேளாண் வணிகத் துறை சார்பில் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு நேரடி கலந்தாய்வுக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, வேளாண்மை விற்பனை வாரியத் தலைவர் கே.பி.டி. கணேசன் தலைமை வகித்து பேசுகையில்:வேளாண்மைத் துறையில்தான் முதலில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. புதிய தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டதுதான் ராஜராஜன் ஆயிரம் என்ற நெல் சாகுபடி. இந்த முறையில் குறைந்த நிலப் பரப்பில் நெல் பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம் என்றார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை வணிகத்துறை இயக்குநர் இரா. கணேசமூர்த்தி வரவேற்றார். மதுரை வேளாண்மை விற்பனைக் குழுத் தலைவர் ஆர். கணேசன், வேளாண்மை கல்லூரிப் பேராசிரியர் சி.முத்தையா, திருப்பரங்குன்றம் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் ஆர். செல்வன், தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆர். மோகன்குமார், மதுரை விற்பனைக்குழு செயலாளர் பாஸ்கரராஜ்,மதுரை முதுநிலை வணிக மேலாளர் மோகனசுந்தரம்,மதுரை சமூக அறிவியல் கல்லூரி பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு நவீன விவசாயத்தின் தொழில்நுட்பம் குறித்து விளக்கினர்.

இதில் நூற்றுக்கும் அதிகமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

வேளாண் அலுவலர் கா. முருகன் நன்றி கூறினார்.

**விதை பரிசோதனை நிலையம் திறப்பு**

First Published : 29 Jan 2011 12:25:35 PM IST

தேனி, ஜன. 28: தேனியில் விவசாயத் துறை சார்பில், விதைப் பரிசோதனை நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மதுரை விதை ஆய்வு துணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தேனி அனுகிரகா நகரில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள விதை பரிசோதனை நிலையத்தில், விவசாயிகள் மற்றும் விதை விற்பனை நிலையங்கள் தங்களிடம் உள்ள விதைகளின்

மாதிரிகளை பகுப்பாய்வு செய்து, அதன் முளைப்புத் திறனை அறிந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 29 Jan 2011 10:02:09 AM IST

ஈரோடு, ஜன. 28: பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 82.34 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 155 கன அடி வீதம் தண்ணீர் வந்தது.

அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி விதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

அணை நீர் இருப்பு 16.95 டிஎம்சி.

**விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கும் விழா**

First Published : 29 Jan 2011 12:21:08 PM IST

திருப்பத்தூர், ஜன. 28: திருப்பத்தூரில் விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை திட்டத்தின் சார்பில் இடுபொருள் வழங்கும் விழா நடைபெற்றது (படம்).

திருப்பத்தூர் வேளாண்மை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு, திருப்பத்தூர் பேரூராட்சி மன்றத் தலைவர் என்.எம். சாக்ளா தலைமை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குநர் பரமேஸ்வரி முன்னிலை வகித்தார். திருப்பத்தூர் பகுதியைச் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு இடுபொருள்களின் பயன்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டு, பொட்டாசியம் நைட்ரேட், மன்ஸிம், போன்ற இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

விழாவில், மகிபாலன்பட்டி, மணல்மேல்பட்டி, நெடுமரம், கண்டவராயன்பட்டி, ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டு இடுபொருள்களை வாங்கிச் சென்றனர். ஏற்பாட்டை, தோட்டக்கலைத் துறையினர் செய்திருந்தனர். முடிவில், உதவி அலுவலர் காமாட்சி நன்றி கூறினார்.

**கரும்புக்கு டன்னுக்கு ரூ.1987 தர விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 29 Jan 2011 12:19:44 PM IST

சிவகங்கை, ஜன. 29: கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆதரவு விலையாக ரூ. 1987 கிடைக்க ஆட்சியர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அப்போது கரும்பு விவசாயிகள் சிலர், சிவகங்கை படமாத்தூரில் உள்ள சக்தி சர்க்கரை ஆலைக்கு ஈரோட்டு ஆப்பக்கூடல் பகுதியிலும் ஓர் ஆலை உள்ளது. அங்கு கரும்புக்கு என்ன விலை

வழங்கப்படுகிறதோ, அதே தொகை இங்குள்ள விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு அங்கு டன்னுக்கு ரூ. 1987 தரப்படுகிறது. ஆனால், இங்கு ரூ. 1900 மட்டுமே தரப்படுகிறது.

இதுபோன்ற பிரச்னை முன்பு ஏற்பட்டபோது, அப்போது இருந்த ஆட்சியர் தானே அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரிடம் பேசி சுமுகத் தீர்வை ஏற்படுத்தினார். அதுபோல நீங்களும் பேசி பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தினர். அப்போது அங்கு இருந்த சக்தி சர்க்கரை ஆலை பிரதிநிதியிடம் இதுபற்றி ஆட்சியர் கேட்டபோது, முன்பு ரூ. 1,900 வழங்கப்பட்டது. இப்போது 25 உயர்த்தி வழங்கப்படுகிறது என்றார்.

இதற்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இது அப்பட்டமான பொய் என்று கூறினர். அதிகாரிகள் எங்களுக்கு இனாமாகத் தர வேண்டாம். கரும்பின் பிழிதிறன் அடிப்படையில் பணம் வழங்க வேண்டும். கரும்பின் பிழிதிறனை அளக்கும் கருவியை இங்கு கொண்டுவந்து ஆய்வு செய்ய வேளாண்மைத் துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

விவசாயிகள் குறைகளைத் தெரிவிக்கும் கூட்டமாக மட்டும் இது உள்ளது. தீர்வை ஏற்படுத்தும் கூட்டமாக இது இல்லை என்று விவசாயிகள் குற்றம்சாட்டினர். அந்த நேரத்தில் தமிழ் மாநில விவசாயிகள் சங்கத் தலைவரும், மாவட்ட எம்.எல்.ஏ.வுமான எஸ்.குணசேகரன் அங்கு வந்தார். அவரையும், ஆலைப் பிரதிநிதியையும், விவசாயிகளில் சிலரையும் அழைத்துக்கொண்டு கூட்ட அரங்குக்கு வெளியே சென்று ஆட்சியர் சிறிது நேரம் ஆலோசனை நடத்தினார்.

பின்னர், கூட்ட அரங்கத்துக்கு வந்த எம்.எல்.ஏ. குணசேகரன், இப் பிரச்னை குறித்து சக்தி சர்க்கரை ஆலை தலைவர் மாணிக்கத்தை நேரில் அழைத்து ஆட்சியர், விவசாயப் பிரதிநிதிகள் முன்னிலையில் பிப்ரவரி 2-ம் தேதி கூட்டம் நடத்தி இறுதி முடிவு எடுக்கப்படும் என்று ஆட்சியர் முன்னிலையில் அறிவித்தார். இதையடுத்து, இப் பிரச்னை தாற்காலிகமாக முடிவுக்கு வந்தது.

# பசு மாடுகளை "காணை நோய்' தாக்கி பால் உற்பத்தி பாதிப்பு: கன்றுகள் இறப்பு

பதிவு செய்த நாள் : ஜனவரி 29,2011,01:45 IST

உசிலம்பட்டி:மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, சேடபட்டி, செல்லம்பட்டி பகுதிகளில் பசு மாடுகளுக்கு காணை நோய் தாக்கியதால், பால் உற்பத்தி குறைந்தது. நோய் தாக்கிய மாடுகளில் பால் குடிக்கும் கன்றுகளும் இறக்கின்றன.உசிலம்பட்டி பகுதியில் அம்மமுத்தன்பட்டி, ஜோதில்நாயக்கனூர், சேடபட்டி, கீரிப்பட்டி, மாதரை, நக்கலப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் மாடுகளை காணை நோய் தாக்கியது. இம்மாடுகளின் வாய், நாக்கு, மூக்கு, பால்காம்பு, கால்களில் புண்கள் ஏற்படுகின்றன.

பால் உற்பத்தி குறைந்ததுடன், சில நாட்களில் ஏராளமான கன்றுகள் இறந்தன.மாதரை கிராமத்தைச் சேர்ந்த லதா கூறியதாவது: நோய் தாக்திய மாடுகளை பிரித்து வைத்து பராமரிக்கிறோம். இருந்த போதும், அந்த மாடுகளில் இருந்து பால் குடித்ததால் ஏழு கன்றுகள் இறந்து விட்டன. தடுப்பு ஊசிகள் போட்டும் நோய் தாக்கியுள்ளது. ஒரு வேளைக்கு 140 லிட்டர் பால் கறப்போம். தற்போது இது, பாதியாக குறைந்துள்ளது, என்றார்.நக்கலப்பட்டி ராஜா, ""நோய் தாக்கிய மாடுகள் இரை எடுக்க மறுக்கின்றன," என்றார்.உசிலம்பட்டி கால்நடை ஆஸ்பத்திரி டாக்டர் ரவிச்சந்திரன் கூறியதாவது: தடுப்பு ஊசி போட்டிருந்தாலும் சில வைரஸ்களால் ஏற்படும் நோயை கட்டுப்படுத்த முடியவில்லை.

இதற்கு தொடர் மழை, அதிக குளிர் காரணம். மாடுகளின் நாக்குகளில் புண் ஏற்படுவதால் இரையை எடுக்காது. மாடுகளை முறையாக பராமரித்தாலே சில நாட்களில் இந்த நோய் கட்டுப்படும். புண்கள் ஏற்பட்ட பகுதிகளை இரண்டு லிட்டர் தண்ணீரில் நூறு கிராம் உப்பு சேர்த்து கழுவ வேண்டும். தொடர்ந்து அரை கிராம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு கழுவ வேண்டும். நாக்கில் கிளிசரின் தடவலாம். கால் புண்களுக்கு போரிக் பவுடர், வேப்ப எண்ணெய் கலந்து தடவலாம்.

மாடுகளுக்கு வலுக்கட்டாயமாக இரையை புகட்டக் கூடாது. அரை கிலோ கம்பு தானியத்தை அவித்து, அரைத்து தண்ணீரில் கலந்து வைத்தால், மாடு தானாக குடிக்கும். மூன்று நாட்கள்

இப்படி பராமரித்தாலே நோய் தாக்கம் குறையும்.நோய் தாக்கிய மாடுகளின் காம்புகளில் இருந்து சிறிது பாலை கறந்து விட்டு பின், குடிக்கவிட்டால் கன்றுகளை காப்பாற்றலாம். இந்த நோய் கலப்பின மாடுகளை மட்டுமே தாக்கியுள்ளது, என்றார்.

**வன உயிரின புகைப்பட கண்காட்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 29,2011,20:53 IST

தேனி : தேனி வெஸ்டர்ன் காட்ஸ் ஓட்டலில் பிப்., 5 மாலை 4 மணிக்கு, வனம் டிரஸ்ட் சார்பில் சுற்றுச்சூழல் மற்றும் வன உயிரினம் பற்றிய புகைப்பட கண்காட்சி நடக்கிறது.

டாக்டர் ராஜ்குமார் கூறியதாவது: கண்காட்சியில் அபூர்வ புகைப்படங்கள் இடம்பெற உள்ளது. யுனெஸ்கோ விருது பெற்ற போட்டோகிராபர் செந்தில்குமரன், உயிரோட்டத்துடன், போட்டோ எடுப்பது தொடர்பான பல நுட்பங்கள் குறித்து விவரிக்க உள்ளார். கண்காட்சியில் பங்கேற்பவர்களுக்கு புதன், வியாழன்,வெள்ளிக்கிழமைகளில் நலம் ஆஸ்பத்திரியில் இலவச டோக்கன் வழங்கப்படுகிறது. 99946 05500, 88700 07020 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு பதிவு செய்து டோக்கன் பெறலாம் என்றார்.

**நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 29,2011,21:13 IST

திருப்புவனம் : திருப்புவனத்தில், நெல் கொள்முதல் நிலையம் திறப்பு விழா நடந்தது. மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சேங்கைமாறன் தலைமை வகித்தார். பேரூராட்சி தலைவர் பிச்சைமுத்து முன்னிலை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் வேம்புலிங்கம் மையத்தை திறந்தார். தாசில்தார் வைத்தியலிங்கம், துணை தலைவர் கனகு, நுகர்பொருள் வாணிப கழக மேலாளர் கண்ணையாசாமி, கவுன்சிலர்கள் ஈஸ்வரன், சுந்தரவடிவேலு பங்கேற்றனர்

**உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து குறைவால் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 29,2011,20:38 IST

காரியாபட்டி : காரியாபட்டி உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து குறைவாக இருப்பதால், ஏமாற்றமடையும் வாடிக்கையாளர்கள், வெளிமார்க்கெட்டில் அதிகவிலைக்கு வாங்கும் அவலம் நீடிக்கிறது.

காரியாபட்டி அருகே உள்ள ஆவியூர், அரசகுளம், குரண்டி, மாங்குளம், புல்லூர், முஷ்டக்குறிச்சி, கல்லுப்பட்டி ஊர்களில் தோட்ட விவசாயம் அதிக அளவில் நடக்கிறது.

கத்தரிக்காய், தக்காளி, வெண்டை, பாகற்காய், வெங்காயம் உட்பட பல்வேறு காய்கறிகளைக காரியாபட்டி உழவர் சந்தையில் விற்பனை செய்தனர். சில நாட்களிலே விற்பனை சரிவர இல்லாததால் சிலர், காய்கறிகளை, உழவர் சந்தைக்கு கொண்டுவருவதை நிறுத்தி விட்டனர். தற்போது ஐந்து கடைகள் மட்டுமே இயங்கும் நிலையில், சரிவர காய்கறி வரத்து இல்லாததால் வாடிக்கையாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

வெளிமார்க்கெட்டில் அதிக விலைக்கு வாங்கும் அவலத்தில் உள்ளனர். இவர்களின் வரத்தும் குறைந்து பல கடைகள் வெறிச்சோடிக்கிடக்கின்றன.
வெளியூர்களுக்கு காய்கறிகளை கொண்டு செல்லும் விவசாயிகளை இங்கு கொண்டுவர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அனுமதியில்லாமல் பஸ் ஸ்டாண்டில் விற்பவர்களை பாதுகாப்பான இடத்தில் விற்க நடைமுறைப்படுத்துவதோடு, சுத்தமில்லாத காய்கறிகளை விற்பதை தடுக்க வேண்டும். உழவர் சந்தையை முழுவீச்சில் செயல்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பயிர் காப்பீடு கமிஷனுக்காக விவசாயிகள் மிரட்டல்**
பதிவு செய்த நாள் : ஜனவரி 29,2011,21:11 IST

பயிர் காப்பீடு தொகையில் மீண்டும் மெகா ஊழல் நடத்துவதற்கான முயற்சியில் சிலர் இறங்கியுள்ளதால் , தங்களுடைய பணம் முழுமையாக கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் விவசாயிகள் உள்ளனர்.
மாவட்டத்தில் பருவ மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு 24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பணம் முழுமையாக விவசாயிகளுக்கு சென்றடையுமா? என்ற சந்ததேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. கமிஷன் என்ற பெயரில் "கோடிகளில் புரள' வங்கி ஊழியர்கள், கூட்டுறவுதுறையினர், வி.ஏ.ஒ.,க்களும் தயாராகிவிட்டனர் என்ற புகாரும் உள்ளன.

ஆண்டுதோறும் பயிர்காப்பீடு தொகை வழங்கும்போது பல்வேறு பிரச்னைகள் எழுவதும் அதை தீர்த்துவைப்பதும் , சில இடங்களில் லஞ்ச ஊழல் தடுப்பு போலீசார் அதிரடி ரெய்டு நடத்தி, பலர் மீது வழக்குபோட்டதுதான் மிச்சம். விவசாயிகளுக்கு சரியான தீர்வு கிடைக்கவில்லை.

கடந்த முறை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இன்சூரன்ஸ் தொகை வாங்கிய விவசாயிகளிடம் கமிஷன், டிபாசிட் போன்ற பல வழிகளில் சுரண்டல் செய்தனர். இன்று வரை டிபாசிட் தொகைக்கு ரசீதும் இல்லை, டிபாசிட் பணத்தையும் வாங்க முடியவில்லை. அப்பாவி விவசாயிகளை பல்வேறு வழிகளில் பாடாய் படுத்துவதால் போராட்டங்கள் நடத்துவதை தவிரவேற வழியில்லை என்ற முடிவிற்கு வந்துள்ளனர்.

மாவட்டத்தில் அதிகமான அளவு பதிவு செய்து பெரும் தொகை வந்துள்ளநிலையில் விவசாயிகளிடம் பட்டா, பத்து ஒன்று அடங்கல், தந்தை பெயரில் இருந்து இறந்திருந்தால் வாரிசு சான்றிதழ் போன்றவைகளை கேட்டு அலையவிடுவது தற்போது நடக்கும் சம்பவம். இதில் கூட்டுறவு சங்கத்தினரும் அந்தந்த பகுதி வி.ஏ.ஓ.,க்களும் ரகசிய உடன்பாடு வைத்து கொண்டு கூட்டுறவு சங்கத்தினர் கேட்கும் சான்றிதழ்களை எளிதில் கிடைக்காத வகையில் செய்வதும்,இதன் மூலம் விவசாயிகளின் பணத்தின் பல கோடியை பினாமி பெயரில் சுரண்டுவதற்கும் தயாராகிவிட்டனர்.

இதுதொடர்பாக விவசாயிகளின் குமுறல்கள் சில இதோ....
பாஸ்கரசாமி(காருகுடி): விவசாயிகளின் பயிர் காப்பீடு தொகையை காசோலையாக வழங்க வேண்டும் என கூறியிருந்தாலும் ,கூட்டுறவு சங்க செயலாளர்கள் காசோலையின் பின்புறம் விவசாயிகளிடம் கையொப்பம் வாங்கி வங்கியில் பணத்தை எடுத்து, அதில் குறிப்பிட்ட தொகையை பிடித்தம் செய்து தருகின்றனர். கேட்டால் டிபாசிட் எனவும் அலுவலகத்தில் மற்ற செலவுகள் உள்ளது எனவும் ஏமாற்றுகின்றனர். எதிர்கேள்வி கேட்டால் அடுத்த முறை எங்களிடம்தான் வரவேண்டும் என மிரட்டுகின்றனர்.

சேகர்(ராமநாதபுரம்): பயிர் காப்பீடு தொகையை பெறுவதற்காக வி.ஏ.ஓ., அலுவலகத்தில் நாள்முழுவதும் கூட்டம் அலைமோதுகிறது. விவசாயிகளை பாடாய்படுத்தி பணத்தை முடிந்தளவு பறித்துகொள்கின்றனர். சிலரை அலைய வைக்கின்றனர். பெரும் விவசாயிகள், அமைச்சர் போன்றவர்களுக்கு லட்ச கணக்கிலான தொகையை வீட்டிற்கே சென்று வழங்குகின்றனர். ஏழை விவசாயிகளோ சொற்ப பணத்தை வாங்க கையிலுள்ள பணத்தை இழந்து போராடி வாங்க வேண்டிய அவலநிலையில் உள்ளனர்.

கருப்பையா (திருவாடானை): திருவாடானை தாலுகாவில் அதிகளவு ஒதுக்கீடு செய்ததாக கூறத்தான் செய்கின்றனர். இது விவசாயிகளுக்கா? கூட்டுறவு சங்கத்தினருக்கா? என தெரியவில்லை. அரசு வழங்கும் எந்த தொகையையும் எளிதில் பெற முடியாது என்பதற்கு ,தற்போது வழங்கிய மழைசேத நிவாரண தொகையே உதாரணம். அதிகாரிகளோ அவர்கள்

வீட்டிலிருந்து தருவதாக நினைத்து கொண்டு விவசாயிகளை கொத்தடிமைபோல் பாவிக்கின்றனர்.

வேலு(வண்ணாங்குண்டு):நடப்பாண்டில்பெய்த கன மழையால் வளர்ந்த நெற்பயிர்கள் மழையால் அடித்து செல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விவசாய பணிகளை தொடர முடியாத நிலையில் உள்ளேன். வெள்ள சேதங்களை மத்திய அரசு அதிகாரிகள் பார்வையிட்டு சென்றும் நிவாரணம் வழங்கவில்லை.ஏழை விவசாயிகள் நிவாரணம் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

வேலு (ஆர்.எஸ்.மங்கலம்): வெள்ள நிவாரணமாக 30 சதவீதம் மானியம் மட்டுமே வழங்குகின்றனர். இதற்காக ஆயிரம் ரூபாய்க்கு நூறு ரூபாய் வசூல் செய்கின்றனர். பிடித்தம் செய்யும் தொகைக்கு எவ்வித ரசீதும் தருவதில்லை.சேமிப்பு கணக்கு தொகையினை அவசர தேவைக்காக திருப்பிதருவதும் இல்லை . பிடித்தம் செய்யும் தொகைக்கு கையெழுத்து பெறுவதும் இல்லை.

முருகன்(ஒப்பிலான்): 2009 ,2010க்கான பயிர் இன்சூரன்ஸ் செய்தவர்களுக்கு இதுவரை வழங்கவில்லை. மழையால் நெல், மிளகாய், உளுந்து உள்ளிட்ட விவசாயம் சேதமடைந்தது. அதற்கும் வெள்ள நிவாரணம் வழங்கவில்லை. இதனால், 2011 க்கான இன்சூரன்ஸ் பதிவு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. விவசாயத்தையே நம்பியுள்ள நாட்டில், விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர்.

கருணாகரன் (முதுகுளத்தூர்): வான்மழையை நம்பி கடன்களை வாங்கி விவசாயம் செய்த விவசாயிகளின் ஏக்கம், இயற்கை சீற்றங்களால் அழிந்துள்ள போதிலும், அரசு அறிவித்த இன்சூரன்ஸ் இழப்பீடு தொகை, வெறும் கானல் நீராகவே உள்ளது. மிளகாய், நெல் பயிர்களுக்கு உரிய நிவாரணம் இன்றி, கருவேல மரங்களை பிரதான தொழிலாக கொண்டுள்ளனர். அரசு வழங்கும் குறைவான தொகையும், கமிஷன் பெயரில் பிடித்தம் செய்து, யானை பசிக்கு சோளப்பொறி என்பது போல், 'தம்மாத்துண்டு'இழப்பீட்டு தொகையினை வேறு வழியில்லாமல் பெற்று வருகின்றனர்.

**-நமது நிருபர் குழு-**

**விவசாயிகள் சங்கம் கடலூரில் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 29,2011,22:07 IST

கடலூர் : விவசாயிகள் சங்கம் சார்பில் கடலூரில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

பெட்ரோல், உரம் மற்றும் இடுபொருட்களின் விலை உயர்வால் நெல்லுக்கு (சன்னரகம்) குவிண்டாலுக்கு 1,500 ரூபாய், மோட்டா ரகத்திற்கு 1,400 ரூபாய் வழங்க வேண்டும். கரும்பு டன்னுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடந்தது. கடலூர் உழவர் சந்தை எதிரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் கண்ணன் தலைமை தாங்கினார்.

கண்ணன், ஜாகீர் உசேன், ஆறுமுகம் முன்னிலை வகித்தனர். மாநில துணை செயலர் ஏழுமலை, மாவட்ட செயலர் ரவிச்சந்திரன், மாநிலக்குழு காமராஜ், மாவட்ட துணைத் தலைவர் தட்சணாமூர்த்தி, பொருளாளர் சந்திரசேகரன், துணை செயலர்கள் லோகநாதன், இளம்பாரதி, மணி, துணைத் தலைவர் தனபால் கண்டன உரையாற்றினர்.

**மக்காச்சோள விலை "விர்ர்...' கொள்முதல் செய்ய ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,22:40 IST

உடுமலை: வெளிமாநில வரத்து குறைந்துள்ளதால், மக்காச்சோளத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உடுமலை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மக்காச்சோள அறுவடை தீவிரமடைந்துள்ளது. இரு வாரங்களுக்கு முன் அறுவடை துவங்கிய போது, நூறு கிலோ மூட்டை ஒன்றுக்கு சராசரியாக 920 ரூபாய் விலை கிடைத்தது. கர்நாடகா மாநில வரத்து குறைந்ததால், மக்காச்சோளத்துக்கான விலை, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நேற்று மூட்டைக்கு, 955 ரூபாய் வரை, உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விலை கிடைத்தது.

ஒழுங்கு முறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் சந்திரசேகரன் கூறுகையில், ""உடுமலை சுற்று வட்டாரப் பகுதிகளில் அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளதால், ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு வரத்து அதிகரித்துள்ளது. சீசன் துவங்கி நேற்று வரை, 407 மெட்ரிக்., டன் மக்காச்சோளம் உடுமலை விற்பனைக் கூட களங்களில் காய வைத்து விற்பனை செய்யப்பட்டுள்ளது. வியாபாரிகள் கொள்முதல் செய்ய ஆர்வம் காட்டுவதால், வரும் 31ம் தேதி

முதல் டெண்டர் முறை அமல்படுத்தப்பட உள்ளது. இதனால், விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும்," என்றார்.

**விதை கிராமத்திட்டம் விவசாயி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,23:51 IST

குளித்தலை: தோகமலை யூனியன், கழுகூரில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் எண்ணெய்வித்து பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பஞ்சாயத்து தலைவர் மணிமேகலை தலைமை வகித்தார். யூனியன் கவுன்சிலர் கர்ணன் பங்கேற்றார். வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) காதர்மொØ ஹதீன் வரவேற்றார்.

விதை சான்றளிப்பு துறை செயல்பாடு, வழிமுறை, விதைப்பண்ணை பதிவு செய்தல் குறித்து விதைச்சான்று உதவி இயக்குனர் கைலாசபதி பயிற்சியளித்தார். விதை நெல்லின் முக்கியத்துவம், தரமான நெல்விதை உற்பத்தி மற்றும்நெ ல் விதைப்பண்ணை அமைத்தல் குறித்து குளித்தலை விதைச்சான் று அலுவலர் தண்டபாணி பேசினார். பயிற்சியில் மு ன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். விவசாயிகளுக்கு அடையாள அட்டை மற்றும் இடுபொருள் மானியத்தில் வழங்கப்பட்டது.

**பட்டுக்கூடு தேவை அதிகரிப்பால் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,22:49 IST

கோவை: பட்டுநூல் இறக்குமதி குறைவு, இயற்கை சீற்றம் போன்றவற்றால், பட்டுக்கூடுகளுக்கு தேவை அதிகரித்துள்ளது. விலையும் உயர்ந்துள்ளது. விலை கிடைக்காமல் ஆதங்கத்திலிருந்த விவசாயிகள், இந்த வாய்ப்பை பயன்படுத்தி உற்பத்தியை அதிகரித்துள்ளனர். பட்டுத்துணிக்கு தேவையான நூலிழை பட்டுக்கூடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. தமிழகத்தில் உடுமலை முன்னோடியாக உள்ள நிலையில், பொள்ளாச்சி, கோபி உட்பட பல்வேறு பகுதிகளில் பட்டு தயாரிப்புக்கு மூலப்பொருளான பட்டுக்கூடுகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கோவை மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ள நிலையில், பட்டுக்கூடு உற்பத்தியிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சீரான சீதோஷ்ண நிலையால் மஞ்சள் நிற கூடுகளை விட, வெண்ணிற கூடுகள் அதிகளவில் இங்கு உற்பத்தி செய்யப்படுகின் றன.

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 3,500 ஏக்கர் நிலத்தில் பட்டுப்புழு வளர்ப்பு நடக்கிறது. 2000 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். பட்டு வளர்ச்சி அலுவலகத்தில் முட்டைகள் பெறப்பட்டு, வளர்ப்பு மனைகளில் குறிப்பிட்ட தட்ப வெப்ப நிலையில் வளர்க்கப்படும் புழுக்கள், 30 நாட்களில் வளர்ச்சியடைந்து கூடுகள் கட்டத் துவங்குகின்றன. கோவை, சேலம், தர்மபுரி உட்பட பல்வேறு பகுதிகளில் உள்ள கொள்முதல் மையங்களில் கூடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழகத்தில் பட்டுக்கூடுகளுக்கு தகுந்த விலை கிடைக்காததால், கர்நாடக மாநிலத்திலுள்ள ராம்நகருக்கு கூடுகள் கொண்டு செல்லப்பட்டன.

குறிப்பிட்ட நாட்களுக்குள் கூடுகளை விற்பனை செய்யாவிட்டால், இழப்பு ஏற்படும். போக்குவரத்துச் செலவு, அலைச்சலால் விவசாயிகள் சிரமப்பட்டு வந்தனர். சில மாதங்களாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டிலும் பட்டுக்கூடுகளின் தேவை அதிகரித்துள்ளது. விலையும் அதிகரித்துள்ளது. ஓராண்டுக்கு முன் அதிகபட்சமாக ஒரு கிலோ வெண்ணிற பட்டுக்கூடுகள் ரூ. 200க்கு கூட விற்பனையாகவில்லை. தற்போது ரூ. 400 ஆக உயர்ந்துள்ளது. கோவை, பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் சத்தியமூர்த்தி கூறுகையில், ""கோØவியல் உள்ள கொள்முதல் மையத்துக்கு தினமும் 1,500 முதல் 2,000 கிலோ பட்டுக்கூடுகள் விற்பனைக்கு வருகின்றன.

""ஆறு மாதத்துக்கு முன் 600 கிலோ கூடுகள் மட்டுமே வந்தது. பலரும் பட்டுப்புழு வளர்ப்பில் புதிதாக களம் இறங்கியிருந்தாலும், அதற்கேற்ப கூடுகளுக்கும் தேவை தொடர்ந்து உள்ளது. எதிர்காலத்தில் விலை குறைய வாய்ப்பே இல்லை; அதிகரிக்கக் கூடிய சூழல்தான் நிலவுகிறது,'' என்றார்.

**வெள்ள நிவாரணம் முறையாக வழங்கவில்லை : தஞ்சை விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் பரபரப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,23:48 IST

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சண்முகம் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், வேளாண் இணை இயக்குனர் பாலசுப்பிரமணியன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கலியபெருமாள், மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் சிவாஜி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் அசோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
கலெக்டர் சண்முகம் பேசுகையில், ""தஞ்சை மாவட்டத்தில் அறுவடைப்பணி விரைவாக

நடக்கிறது. நடப்பு காரீப் பருவத்தில் இதுவரை ஒரு லட்சத்து ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 358 நெல் கொள்முதல் நிலையம் திறந்து செயல்படுகிறது. தேவைக்கேற்ப கூடுதலாக திறக்கப்படும். நெல் கொள்முதல் குறித்து நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் நேரில் ஆய்வு செய்து சென்றுள்ளார். கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து கூடுதலானால் ஐந்து லட்சம் ரூபாய் வரை பணம் தினமும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது மேட்டூரில் இருந்து தண்ணீர் நிறுத்தப்பட்டதால் விரைவில் தூர்வாரும் பணிகள் துவங்கும்," என்றார்.

விவசாயிகள் கக்கரை சுகுமார், ஜீவகுமார், சுந்தரவிமலநாதன், ரவிச்சந்தர் உட்பட பல விவசாயிகள் கலெக்டரை முற்றுகையிட்டு, ""கடந்த நவம்பர், டிசம்பரில் தஞ்சை மாவட்டத்தில் பலத்த மழையால் நெற்பயிர்கள் கடுமையாக பாதித்து, மகசூல் குறைந்துள்ளது. மத்திய, மாநில அரசின் குழுவினர் வந்து பாதிப்பை பார்த்துச் சென்றனர். 28 ஆயிரம் ஹெக்டேர் பாதிப்பு என மாவட்ட நிர்வாகம் அறிக்கை வழங்கியது. ஆனால், இன்று வரை எந்த கிராமத்திலும் விவசாயிகளுக்கு முழுமையாக நிவாரணத்தொகை கிடைக்கவில்லை. பல இடங்களில் நிவாரணத்தொகை கொடுத்து முடித்தாகிவிட்டது என்கின்றனர். எங்கெங்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை விளக்க வேண்டும்," எனக்கூறினர்.

""பாதிக்கப்பட்ட பகுதிகளை கணக்கிட்டு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. முழுமையாக நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது," என கலெக்டர் பலவாறு விளக்கமளித்த நிலையில், காலை 11 மணிக்கு தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி ஏற்க வேண்டி உள்ளதாக கூறி கலெக்டர் வெளியேறினார். இதனால், கூச்சல் அடங்கியது.

பின், பயிர் காப்பீடு நிறுவனத்தினர், ""கடந்த 2008ம் ஆண்டுக்கு 88 கோடியும், 2009ம் ஆண்டுக்கு 6.17 கோடியும் பயிர் காப்பீட்டு நிறுவனம் மூலம் இழப்பீட்டுத்தொகை பெறப்பட்டுள்ளது. மீதத்தொகை விரைவில் வரும். நடப்பு 2010ம் ஆண்டுக்கு கணக்கெடுப்பு யூனியன் வாரியாக நடத்தப்படும்," என்றார்.

""பயிர் காப்பீட்டுக்கு அறுவடையின்போது மகசூல் அளவை கணக்கீடு செய்வதை அந்தந்த பகுதியில் உள்ள விவசாய அமைப்புகளிடம் தெரிவித்து செய்ய வேண்டும். முழுமையாக பயிர் காப்பீடு வழங்க வேண்டும்," என விவசாயிகள் வலியுறுத்தினர்.

சுந்தரவிமலநாதன்: பெருமழை, வெள்ளத்தில் ஆற்றில் நீர் வீணாவதை தடுக்க முக்கொம்பில் இருந்து அணைக்கரைக்கு இடைப்பட்ட பகுதியில் எட்டு கதவணைகள் அமைக்க வேண்டும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வங்கிகளில் விவசாயி அல்லாதவர்களுக்கு விவசாய கடன் வழங்கி முறைகேடு நடப்பதை தடுக்க வேண்டும். இதை சி.பி.ஐ., விசாரிக்க வேண்டும். மழைக்காலத்தில் கூடதினமும் மின்வெட்டு தொடர்ந்தது. இனி கோடை விவசாயம் துவங்க உள்ளதால், முன்கூட்டியே மின்தடை குறித்து அரசு அறிவிக்க வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சாமிநடராஜன்: உற்பத்தி செலவு அதிகரிப்பதால் நெல் குவிண்டாலுக்கு ஆயிரத்து 500 ரூபாய், கரும்பு டன்னுக்கு மூன்றாயிரம் ரூபாய் வழங்க வேண்டும். கிராம பால் கூட்டுறவு சங்கங்களின் கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு பசும்பாலுக்கு லிட்டருக்கு ஐந்து ரூபாயும், எருமைப்பாலுக்கு எட்டு ரூபாயும் உயர்த்தி வழங்க வேண்டும். கடைமடைப்பகுதியான பேராவூரணி, பட்டுக்கோட்டை, மதுக்கூர் பகுதிக்கு ஃபிப்ரவரி 15ம் தேதி வரை தண்ணீர் விட வேண்டும். இவ்வாறு விவசாயிகள் வலியுறுத்தினர்.

**மலிவு விலையில் காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,23:19 IST

தேனி:மாவட்டத்தில் 25 இடங்களில், மலிவு விலையில் காய்கறி விற்பனை செய்யப்பட உள்ளதாக, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் குருமூர்த்தி தெரிவித்தார். அவர் கூறியதாவது:வெளிச்சந்தைகளில், வெங்காயம் உட்பட காய்கறிகள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதை தொடர்ந்து கூட்டுறவுத்துறை மூலம் மலிவு விலை காய்கறி விற்பனை மையங்களை நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.மாவட்டத்தில், தேனி, ஆண்டிபட்டி, போடி, உத்தமபாளையம், சின்னமனூர், கம்பம், கூடலூர் ஆகிய ஊர்களில் 25 ரேஷன்கடைகள் மூலம் மலிவுவிலையில் காய்கறிகள் விற்பனை இரண்டு நாட்களில் துவங்கும். விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்து விற்கப்படுவதால் விலை குறைவாக இருக்கும் என்றார்.

**தோட்டக்கலை பல்கலை கேட்டு விவசாயிகள் போராட முடிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,23:11 IST

தேனி:"பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி வளாகத்தில், பல்கலை கழகம் அமைக்கா விட்டால், தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்போவதாக', தேனி மாவட்ட விவசாயி கள் சங்கம் அறிவித்துள்ளது. மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் 52 ஆயிரத்து 694 ஹெக்டேரில் தென்னை, மா, வாழை, தேயிலை உட்பட 48 வகையான தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 8 லட்சத்து 33 ஆயிரத்து 992 டன் பயிர்கள் விளைவிக்கப்படுகிறது. பெரியகுளத்தில் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்சி நிலையம் உள்ளது. பல நூறு ஏக்கரில் தோட்டக்கலை பண்ணை உள்ளது. வைகை அணையில் 50 ஏக்கரில் தோட்டக்கலை பண்ணை உள்ளது.தேனி மாவட்டத்தில் விளையும் அளவுக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகப்படியான தோட்டக்கலைப்பயிர்கள்

விளைவதில்லை. மாறாக அங்கு தோட்டக்கலை பல்கலை அமைத்தால் தமிழக விவசாயிகள் பயனடைய முடியாது. அருகில் உள்ள கர்நாடக மாநில விவசாயிகளுக்கு மட்டுமே பலன் கிடைக்கும்.இது குறித்த அனைத்து விவரங்களும் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் தோட்டக்கலை பல்கலைக்கழகம் அமைக்காவிட்டால் விவசாயிகள் தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்துவோம், என்றார்.

### பருத்தி விலை அதிகரிப்புவிவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,22:58 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் பருத்திக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நாச்சியார்பட்டி, அப்பயநாயக்கர்பட்டி, பாப்பநாயக்கர்பட்டி, கோடாங்கிப்பட்டி, வங்காருபட்டி, நதிக்குடி, மல்லி பகுதிகளில் 200க்கும் அதிகமான ஏக்கரில், செப்டம்பரில் பருத்தி நடவு செய்யப்பட்டது. அக்டோபர், நவம்பரில் மழையால் பருத்தி செடிகள் நன்றாக வளர்ந்து, தற்போது அறுவடை நடந்து வருகிறது. ஏக்கருக்கு 10 குவிண்டால் வரை மகசூல் கிடைத்து, குவிண்டாலுக்கு 5,500 ரூபாய் வரை விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.விவசாயி நாகராஜன் கூறியதாவது: கடந்த இரு ஆண்டுகளாக மாவுபூச்சி தாக்குதலால் நஷ்டம் ஏற்பட்டது. இந்தாண்டு நன்றாக மழை பெய்ததால் விளைச்சல் அதிகரித்து, விலையும் கடந்தாண்டை விட, குவிண்டாலுக்கு 1,500 ரூபாய் கூடுதலாக கிடைக்கிறது, என்றார்.

### தென்னை விவசாயிகள், தொழிலாளர் கூலி உயர்வு பேச்சுவார்த்தை தோல்வி

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2011,22:56 IST

வத்திராயிருப்பு:வத்திராயிருப்பு அருகே கான்சாபுரம், வ. புதுப்பட்டி பகுதியில் கடந்த ஒரு மாதமாக தென்னை விவசாயிகள், தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களிடையே நீடித்து வந்த கூலி உயர்வு பிரச்னை தீர்க்க நடந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இதனால் வெளியூர்களிலிருந்து தொழிலாளர்களை அழைத்து வர விவசாயிகள் முடிவு செய்தனர். வத்திராயிருப்பு மற்றும் சுற்றுப்பகுதி தென்னை மரம் ஏறும் தொழிலாளர்கள் ஜன.1ம் தேதி முதல் தங்களது கூலியை 200 ரூபாயிலிருந்து 250 ஆக உயர்த்தினர். பறித்த தேங்காயை வாகனங்களில் ஏற்றுவதற்கு தனியே கூலி நிர்ணயம் செய்தனர். இதற்கு தென்னை விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இப்பிரச்னையால் விவசாயிகள் ஒருமாதமாக, தேங்காய்களை பறிக்கவில்லை. தொழிலாளர்களும் வேறு வேலைக்கு சென்றனர்.இது தொடர்பாக வத்திராயிருப்பு போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் கனகசுந்தரம் தலைமையில் பேச்சுவார்த்தை நடந்தது. விவசாயிகள்

சங்க நிர்வாகிகள் அழகராஜா, சிங்கராஜா, ராமச்சந்திரபாண்டியன், சடைபாண்டி, தொழிலாளர் சங்க தலைவர் கருப்பையா, துணை தலைவர் கணேசன், செயலாளர் ராமராஜ் துணை செயலாளர் பால்பாண்டி, பெனரி கலந்து கொண்டனர்.தொழிலாளர்கள் நிர்ணயித்த கூலி உயர்வை வழங்க விவசாயிகள் ஒப்புக்கொண்டனர். இதுவரை கடைபிடிக்கப்பட்டு வந்த நடைமுறைப்படி பறித்த தேங்காயை வழக்கம்போல் வாகனத்தில் ஏற்றிவிடவேண்டும் என்றனர். இதற்கு தொழிலாளர்கள் மறுத்தனர். இதையடுத்து பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.வெளியூர்களிலிருந்து ஆட்களை அழைத்துவந்து தேங்காய்களை பறித்துக் கொள்வதாகவும், அதை தொழிலாளர்கள் எவ்விதத்திலும் தடுக்கக்கூடாது என்றனர். இதற்கு தொழிலாளரகள் ஒப்புக்கொண்டனர்.